சிவமயம்

இந்து சாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு.

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

HINDU ORGAN

செய்தித் தாளாகப் பதிவுபெற்றது

பிரதி விலை : சதம் 20.

ஆங்கில மலரும் புது வருட (1889) ஆரம்பம் 28-ம் ... சந்தா: சைவபரிபாலன அச்சியந்திரசாலை, 450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். கொழும்பு: 356

புத்தகம் 60] யாழ்ப்பாணம் காலயுத்தி வரு ஆடி மீ கஉ-ஊ வெள்ளிக்கிழமை (28 7 1978) [ஆலை-கரு

நாநயக்க நல்லைக் கந்தனை வந்தனை செய்வோம்!

நாடு செழிக்கும்; நாமும் உய்வோம்; நானிலமும் ஓங்கும்!

ஈழத்தின் வடபால் உள்ள யாழ்ப் பாணஞ் சைவங் கொழிக்கும் திரு நாடு. இங்கு சிவன், விநாயகன், ஆறுமுகவன் கோவில் கொண்டரு ளும் ஸ்தலங்கள் நூற்றுக்கணக்காக உண்டு. ஒவ்வோர் இடங்களிலுமுள்ள

தத்தாத்த பண்டிதர், வைத்திய கலாநிதி
நா. கனகரத்தினம் அவர்கள்

சைவப் பெருமக்கள் ஆங்காங்கே கோவில்களை ஸ்தாபித்துச் சிவத்தின பரிவார தெய்வங்களையோ சிவ னையோ எழுந்தருளச் செய்து தங் கள் இஷ்ட தெய்வமாக இவற் றைக்கொண்டு அர்ச்சித்துப் போற்றி பணிந்து வணங்கி வேண்டுவோர்வே ண்டியாங்கு ஈயும் இறைவனிடத்தும் இறைவியிடத்தும் அருள் பெற்று வாழ்கின்றனர்.

இக் கோவில்களில் வேத ஆகம முறைப்படி அவ்வக் காலங்களில் உரிய பூசை களையும் விழாக்களையுஞ் செவ்வே நடாத்தி வரு கின்றார்கள். இவற்றில் உற்ஸவ காலங்களே தலை சிறந்தன. அவற்றுள்ளும் மகோற்ஸவமே மிக மிகச் சிறந்தது.

இம்மகோற்ஸவம் சைவ சித்தாந்தத்தில சொல்லப் பெறும் அரிய மூப்பொரு ளாகிய பதி, பசு, பாசம் என்பவற்றையும், பாசகே தத்தைப் பற்றியும், ஆகா மிய, சஞ்சித பிராரப்த கன்மங்களைப் பற்றியும் மூக் குணங்களாகிய சாத்துவ, இராசத, தாமத குணங்க ளைப் பற்றியும், மலபரிபா பாகம், சத்திநிபாதம், சாயு ச்சம ஆகிய நிலைகளைப் பற்றியும் மறு தத்துவங்க ளையும் விளக்கும் தன்மை யாக அமையும் மேலும் மலசம்பந்தமாகிய உயிரானது பாசபந்தம் நீக்கப் பெற்று நிர்மல வஸ்துவாகிய பதியு டன் அத்துவிதமாகி நித்திய சர்வ வியாபக சச்சிதா

(வளர்ச்சி 2-ம் பக்கம்)

இந்துசாதனம் சைவப் பெரியார் சிறப்பு மலர்

எதிர்வரும் 9—8—78 இல் நிகழவிருக்கும் சைவப்பெரி யார் சு. சிவபாதசுந்தரம் அவர்கள் பிறந்த தின நூற் றாண்டு விழாவையொட்டி 4-8-78, 11-8-78 இந்துசாத னம் இதழ்கள் ஒன்றுமலர் சைவப்பெரியார் சிறப்பித ழாக மலர இருக்கின்றன என்பதை ஆசகர்களுக்கு மகிழ்வுடன் அறியத்தருகின் றோம் —ஆ-ர

சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை

யாழ்ப்பாணம், சைவ பரிபாலன சபை ஆதரவில் நிகழும் 10 — 8 — 78 வியாழக்கிழமையன்று சபை மாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

மூற்பகல் 9 00 மணியளவில் சிவபூசா மண்டபத் தில் சிவபூசையும், மாவலர் மண்டபத்தில் விசேட பூசையும், பெரிய புராணம் — வெள்ளானைச் சருக்க புராண படனமும், அதன்பின் மாகேசுர பூசையும் நடைபெறும்.

பண்டிதமணிக்குப் பெருவிழா!

சைவத் தமிழ்ப் போதி ஞர் கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர் களைப் பாராட்டிப் பொது மக்கள் எதிர்வரும் திங்கள் (14 8 78) மாலை பெருவிழா எடுக்க உள்ளனர்.

பேராசிரியர் ஆ. வி மயில்வாகனம் தலைமையில் யாழ் விரசிங்கம மண்டபத் தில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் பழைய மாணவர்கள் உட்படப்பலர் உரையாற்றுவார்கள்.

பண்டிதமணி அவர்க ளது அரிய கட்டுரைகளைத் தாங்கிய "சிந்தனைக் களஞ் சிய" நூல் வெளியீடும் அன்று நடைபெறும்

இருநூற பக்கங்களுக்கு மேற்பட்ட இக் கட்டுரைத் தொகுதியில் வள்ளுவர் எற்றி வைத்த 'வாழ்க்கை விளக்கு' முதலாவது கட்டு ரையாகவும், 'பாரத தர் மம்' என்ற கட்டுரை இர ண்டாக் கட்டுரையாகவும், வடு வடுநுண்ணுபிர், கந்தபுரா ணம், வைதிக சைவ பொக் கிஷம், சங்கதத்தமிழ் உள் ளிட்ட பல கட்டுரைகள் இடைக் கட்டுரைகளாகவும் அமைந்துள்ளன.

மேற்கண்ட செய்தியைப் பண்டிதமணி வெளியீட்டுச்

(வளர்ச்சி 3-ம் பக்கம்)

இலங்கையில் எங்கணும் இருந்து வந்து தரிசிக்கும் கோயில்

மாவைக் கந்தன் தேர்விழா மாண்பு!

ஆடி 18-ம் நாள் (2-8-78) புதன்

இருபத்து நான்கு திருவிழாக்களின் எழில் எல்லாம் ஒருங்கமைந்தாற் போன்று மாவைக் கந்தன் தேர் உலா மகத்தான காட்சியாக 2-8-1978, ஆடி 18ஆம் நாள் காலை நிகழும்

ஐந்து தேர்களும் அணிவகுத்து நிற்பதுபோன்ற காட்சியளிப்பதை அடியார்கள் ஆனந்தம் மேலாகக் கண்டு களிப்பது ஆண்டுதோறும் அமையும் அரிய நிகழ்ச்சி.

ஆதின தர்மகர்த்தா சிவஸ்ரீ ச. து. சண்முக நாதக குருக்கள் தலைமையில் இவ்விழாக்கள் நன்கு நடைபெற்றுவருகின்றன.

நல்லை, முருகப் பெருமான் காலயுத்தி வரு மஹோற்ஸவ விசேட தினங்கள்

இம்முறை நல்லைப் பெருமான் திருவிழா தினங்களில் நேரங்கள் மாற் றியமைக்கப்பட்டுள்ளமையை அடியார்கள் கவனத்திற் கொள்வார்களாக;

9-8-78	புதன்	கொடியேற்றம்	பகல் 12-00	(1ம் திருவிழா)
18-8-78	வெள்ளி	மஞ்சம்	மாலை 5-45	(10ம் திருவிழா)
25-8-78	வெள்ளி	கார்த்திகை	மாலை 5-45	(18ம் திருவிழா)
27-8-78	ஞாயிறு	கைலாசவாகனம்	மாலை 5-45	(19ம் திருவிழா)
30-8-78	புதன்	தெண்டாயுதபாணி உற்சவம்	காலை 7-30	(22ம் திருவிழா)
31-8-78	வியாழன்	சப்பறம்	மாலை 5-45	(23ம் திருவிழா)
1-9-78	வெள்ளி	ரதோற்ஸவம்	காலை 7-00	(24ம் திருவிழா)
2-9-78	சனி	தீர்த்தம்	காலை 7-00	(25ம் திருவிழா)
3-9-78	ஞாயிறு	பூங்காவனம்	மாலை 5-45	(26ம் திருவிழா)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

மாதர் வித்தியா லயவராகிய மிக்க தன்மை
யோர்த்தது வேர்த்து
ஆன்ற நினைத்தல் மாலை குமரே குற்ற மையலுற் றுள்ளீர்களே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

காலயுத்தி ஞ ஆடிமீ கஉ-உ வெள்ளி

உள்ளம்உருகில் உடன் ஆவார்

ஆன்ம நடேற்றத்துக்குரிய அரிய தெரிவை எடுத்துக் காட்டிய வண்ணம் நாமும் திருவருள்பெற்றுப் தம்மோடியைந்தவர்களும் அப்பேறுபெற மிகுந்தும் அன்னதபச் செல்வத்தைச் சிந்தைக் கொத்தாகத் திருமுறைகளாகப் பின்வருவோர் பேணிப் போற்றிப் போனகமடைவச் செய்தவர்கள் சைவகுரவர்கள்.

அந்தத் தபோதனர்களின் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி உரைபாகும் திருமுறைகளில் நாம் அறிய வேண்டியனவெல்லாம் உண்டு, இருந்தும் "விளக்கி லுக்க மின்மினித் திக்காம்பாவை" என்ற வாசகம் காட்டிச் சொன்னது போன்று அவற்றை யாடாது அங்கும் இங்கும் அலைந்த அரவிமையானவற்றைத் தேடுகின்றோம். தேடி அவற்றில் மயங்கி விடுகின்றோம்;

அறிவு மயக்கம் இருக்கும் வரைக்கும் உண்மைப் பொருட் தெரிவுண்டாகமாட்டாது. இதற்காகவே எதைக் கற்றல் வேண்டும் என்று கல்லாரியர்கள் நமக்குப் புகட்டியிருக்கின்றனர். அன்மைக் காலமாக இரண்டு தற்குண்டை எடுத்துக் கொண்டால் பாலர் நற்றவையாரும் அவருக்குப் பின் சைவப் பெரியாரும் தங்கள் பாலபாடம், சைவபோதம் முதலாம் நூல்களிலே தன்னெறியைக் காட்டியருக்கின்றனர்.

இறைவனை அடைதலே மானுடப் பிறவியைாம் பெற்றதன் நோக்கம் என்ற கருத்தை இந் நூல்கள் குறித்து அதற்குரிய நெறியையும் முன்னோர் கண்ட முடிபாம்; மெய்கண்ட சாத்திரம் திருமுறை வழியாகவும், திருத்தொண்டர் செல் வினக்கும் புராணங்கள் காணிகளாகவும் என்கு விளக்கியிருக்கின்றன. உண்மைப் பொருள் எம் முன்னர் தோற்றுவதற்கு உரிய வழி, அதற்காக நாம் உள்ளம் உருகித் தொழுதலே. அழுதால் உன்னப் பெறலாமே என்ற அழுத வாக்கும் இக்கருத்தையே குறிக்கின்றது.

திருக்கோயில் கடவுள் வழிபாட்டுக்குரிய இடம் என்பதை யாமென்னாரும் உணர்வோம், ஆலய வழிபடும் வகையை அறிந்தோமில்லோம். அறிவோமேயானால் ஆலயங்களிலே அமைதியான முறையிலே நினைவுகள் கடைபெறும், அடியார்கள் அமைத்து நின்று உள்ளம் உருகுவர்; உமையொருபாகனும் உடன் ஆவர்.

பாலபாடத்திலும் சைவபோதத்திலும் உள்ளவை தரிசன விதி ஒழுங்குகளைப் பற்றிய உரைகளை நாம் அடிக்கடி படித்த உரிய நெறிகளைப் பழகுதல் அவசியம்.

உடையவன்பால் உள்ளம் உருகவைப்பதைத் தடைசெய்யும் ஒழுங்கீனங்களைக் களைந்தெடுப்பதே சமய போதகர்களின் கடமையாகும். ஆலய வழிபாட்டில் நடைபெற்றிருக்கின்ற அடியார்களின் இதயங்களை ஒலிபெருக்கியிலிருந்து ஒலிக்கும் அங்கே அன்ன என்ற கிழச்சிகளையே இப்பொழுது எங்கும் காண்கின்றோம். பூக்களால் அலங்கரிக்கப்பட வேண்டிய திருவுருவங்களை கை ஆக்கத்தாலாகும் விபரீதச் சோடனைகளால் அணிபெறச் செய்ய முடியுமா? வேத மந்திரங்களின் நாதமும், திருமுறைகள் ஓதும் நாதமும், சங்கும் மங்கள வாத்தியங்கள் முதலியவற்றின் நாதமும் வழிபடுவோருக்கு இறை உணர்ச்சியையுண்டு பண்ணும் அவ்வாறில்லாதவை மற உணர்ச்சியையே ஊட்டுவிக்கும் இவ்வாறான நிலையில் உள்ளம் உருகாத உமைபங்களும் உடன் ஆவதற்கு

மரவகை நாட்டி மண்வளம் பேணுவோம்!

நாயன்மார்கட்டில் மரம் நாட்டு விழா!

யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் 22-7-78 அன்று மரம் நடுகை விழா கோலாகலமாக இனிதே நிறைவேறியது. வித்தியாசாலை அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக விவசாயப் போதனாசிரியர் திரு. எம். ஆனந்த குமாரன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

தலைவர் திரு. க. மாணிக்கவாசகர் அவர்கள் தமது தலைமையில் "மரம் ஒன்றை வளர்ப்பதன் மூலம் நாம் அம் மரத்தின் மூலமும் பயனையும் அனுபவிப்பது மட்டு மன்றி பயன்தரு பறவைகள் பல வளர்சியடைவதற்கு உதவுகின்றோம். இதன் மூலம் மழைவளம், மண் வளம் முதலியன பெருகுவதற்கு மட்டுமன்றி சகல ஜீவராசிகளும் ஒன்றுக் ஒன்று அனுசரணையாகச் செழித்தோங்கி வாழ்வதற்கும் உதவி புரிபவர்களாகின்றோம். விழாக் கொண்டாடுவதற்காக மட்டுமன்றி தொடர்ந்து மரங்களை நடுவதற்கு நாம் இவ்விழாவில் உறுதியெடுத்துக் கொள்வோமாக" என்று குறிப்பிட்டார்.

விவசாய விஞ்ஞான மன்றத்தினரின் பேருழைப்பின் பயனாக நடைபெற்ற இவ்விழாவில், மரம் நடுகை மேற்பார்வையாளர் ஆசிரியர் ஆ. வே. தரைராஜனம் அவர்கள் உட்பட இன்னும் பல பெரியார்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர். இறுதியில் மன்றச் செயலாளர் செல்வன் செ. சத்தியசீலன் அவர்கள் நன்றி கூறினார்

பெரியபுராண படன பூர்த்தி விழா

ஆடிமீ 25 ஆம் நாள் (10-8-78, வியாழக்கிழமை தென்னிப்பனை, தூர்க்கா தேவி ஆலயத்தில் நிகழும் இவ்விழாவின் நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு:

காலை 9.00 மணி கொடியேற்றம், 11.00 மணி விசேட பூசை, 11.45 மணி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, 12மணி புராண வாசிப்பு, மாலை 5 மணி பாராட்டிக் கௌரவித்தல் 12.30 மணி மாகேசுர பூசை.

நாநயக்க நல்லைக் கந்தனை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சுத்த சைவத்துவத்துடன் சைவருக்குத் தன்மையையும் எடுத்துக் காட்டும்

இத் தன்மையால் மகோற்சவமானது மிகவிமரிசையாக பெரும் பூசைக் காலமுமாகச் சிலரால் நிர்ணயிக்கப்பட வேண்டிய தொன்றாக இருக்கின்றது. இதன் விரிவு முக்கியமானதாயினும் ஒரு கட்டுரையில் இடம் பெற முடியாது.

இவ்விசேட மகோற்சவம் கல்லூர்க் கந்தன் ஆலயத்தில் ஆடித் திங்களில் வரும் உன்னத அமாவாசையில் ஆரம்பமாகி பஞ்சமித் திதியில் கொடியேற்றத்துடன் இருபத்தைந்து நாட்கள் நடைபெற்று, ஆவணி அமாவாசையிலே தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும்.

கல்லூர் ஆலயத்தின் நிர்வாகச் சிறப்பு எல்லோரும் அறிந்ததும், பாராட்டப்படுவதும் ஆன அப்படியாக மகோற்சவ ஒழுங்குகளே, பூசை விழா முறைகள் பாராட்டின் மேற்பாராட்டத்தக்கதாக அமைவும்

இக்காலத்தில் பக்தர்களின் அகம் புறத் தூய்மை அக்கரை புறக்கரணங்களும், வழிபாடு, மன ஒருமைப்பாடு மிகமிக உன்னத நிலையில் இருக்கும் தவக்காலமெனலாம்.

ஆண்களும், பெண்களும் ஆயிரக்கணக்காகத் தினமும் முருகன் சந்நிதியில் நாலு வரையும் தவத்தில் முன்னர்கள் ஆண்கள் அண்டசங்க நமஸ்காரமாக விழுந்து புரண்டு கோயிலை வலமாக வருவதும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமாய் அடிமழித்து கோயிலை வலமாக வரும் காட்சியும் உருக்கமாக நெஞ்சையும் உருகச்செய்து பரவசமாக்கும் பக்தியில் நிலைக்கச் செய்யும்.

அலங்காரப் பூசையின் பின் அருள்வள்ளல் அழகன், குமரன், முருகன், குகன் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வாகனங்களிலும் கடைசி நாட்களில் சப்பரத்திலும், தேரிலும் இவர்த்த காட்சியளிக்கும் பக்த கோடிகளுக்கு அருள் பாலித்த விதிவலம் வரும் வனப்பைப் பார்க்கவும், தரிசிக்கவும், இரு கண்களும்; ஒரு சென்னியும் இரு கரங்களும் போதாதவை. ஆயிரம் பல கண்களையும், தலைகளையும், கரங்களையும் கொடுக்கவில்லையே என மனம் துடிக்கும்.

இவ்வாண்டு மகோற்சவம் காலயுத்தி ஆடித் திங்கள் 25-ம் தினம் (9-8 78, இல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆவணித் திங்கள் 17ம் தினத்தன்று (2-9 78 இல் தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும்.

முருகன் குகன் என்று பொழிந்த உருகுஞ்சொல் தந்த அருள்வாய் நல்லைக் கந்தா, வள்ளிதெய்வயானை மணவாளனே மெய்ஞான தெய்வமே.

சைவ பரிபாலன சபை

சமய பாடப் பரீட்சை

சைவ பரிபாலன சபை யார் பாடசாலை மாணவர்களுக்காக அதில் இலங்கை நீதியில் நடத்தும் சைவ சமய பாடப் பரீட்சை யினைப்பு முடிவு திகதி பாடசாலை தவணை மாற்றத்தால் 15 — 9 — 78 வரை பின்போடப்பட்டுள்ளது.

இதுவரை அனுப்பாத பாடசாலைகள் விண்ணப்பங்களை 15—9—78 க்குப் பிற்தாமல் அனுப்பலாம்.

படிவங்கள் தேவையான எழுத்தாளர் மூலம் அறிவித்தால் அனுப்பி வைக்கப்படும்.

சி. சிவராத்தினம்
பரீட்சைக் காரியதரிசி

சைவ பரிபாலன சபை
யாழ்ப்பாணம்.
1-8.78

எங்கள் புதிய அதிபர்

"இந்துசாதனம்" சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை மகாவித்தியாலயத்தின் புதிய கௌரவ அதிபராக திரு. சி. சிவகுருநாதன் M. A., Dip-in-Ed, அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர் முன் இந்த நிலையங்களில் கௌரவ அதிபராகவும், சைவ பரிபாலன சபைத் தலைவராகவும், கௌரவ தலைவராகவும், கௌரவ ஆலோசகராகவும், தலைவராகவுமிருந்த திரு. சி. த. மு. ப. தெம்பரராசாக் செட்டியாரின் புதல்வராவர்.

இவர் வல்வை சித்தம்பராக் கல்லூரி, கொழும்புத்துறை அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகளின் அதிபராகவும், கல்வியமைச்சில் பாடநூல் எழுத்தாளராகவும் இருந்து ஒய்வு பெற்றவர்.

இலவசம்

சுந்தரமூர்த்தி நாயனார் திருவுருவப் படம்

ஆடிச் சோதிக் குருபூசைத் தினத்தில் வைபவங்களிற் பயன்பெற நாயனரின் திருவுருவப் படத்தை மிக்கைதி ஸ்தாபனத்தார் இலவசமாக வழங்குகின்றனர்.

X X X

அகில இலங்கை நீதியாக நடத்தப்பட்ட மரம் நாட்டு விழாவை ஊக்குவிக்கும் பொருட்டு யாழ்ப்பாணம் மிலக்கைற் ஸ்தாபனத்தார் "மரம் விடுக்கும் வேண்டுகோள்" என்னும் பிரசுரத்தையும், பிறந்த நாள் விழாவிற்கு ஒரு மரம் நடுக என்னும் சுலோகம் தாங்கிய அட்டைகள், பிரசுரங்களையும் இலவசமாக வழங்குகிறார்கள்.

"சோலையும் மலையும்
மழைக்குக் காரணம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் நூற்றாண்டுவிழாப் போட்டிகள் 1978

இறுதிப்பெறு பேறுகள்

பேச்சுப் போட்டி (மேற்பிரிவு ஆண்கள்)

1. இ. பாலபாஸ்கரன், மகாஜனக் கல்லூரி
2. ச. தேவானந்தன், யாழ்ப்பாணக் கல்லூரி
3. நா. மனோகரன், வித்தியானந்தா கல்லூரி

மத்திய பிரிவு (ஆண்கள்)

1. கு. குணரூபரியர், யாழ். இந்துக் கல்லூரி
2. செ. பிரபாகரன், மானிப்பாய் இந்துக் கல்லூரி
3. சொ. சுகுதேவ், சாவகச்சேரி இந்துக் கல்லூரி

கீழ்ப் பிரிவு (ஆண்கள்)

1. சி. சிற்சபேசன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
2. சி. சுபேந்திரன், உசன் இராமநாதன் கல்லூரி
3. ச. நேசானந்தன், யாழ்ப்பாணக் கல்லூரி

மேற்பிரிவு (பெண்கள்)

1. சி. பாலகௌரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி
2. வேதவல்லி, பண்டத. மகளிர் கல்லூரி
3. செ. சாந்தாயினி, யூனியன் கல்லூரி

மத்திய பிரிவு (பெண்கள்)

1. சு. தாரகா, யூனியன் கல்லூரி
2. என். சாமினி, நெதஸ்ற் கல்லூரி
3. மு. லோகராயினி, உசன் இராமநாதன் கல்லூரி

கீழ்ப் பிரிவு (பெண்கள்)

1. க. பூமா, வேம்படி மகளிர் கல்லூரி
2. க. வாணி, வசாவிளான் ம. வித்தியாலயம்
3. து. மங்களகுமாரி, இந்து மகளிர் கல்லூரி

திருமுறைப் போட்டி (மேற்பிரிவு - ஆண்கள்)

1. வை. கணேசலிங்கம், மகாஜனக் கல்லூரி
2. ஆர். பிரேமதசரதன், பருத்தித்துறை ம. வித்தியாலயம்
3. எம். கடம்பநாதன், பருத்தித்துறை ம. வித்தியாலயம்

மத்திய பிரிவு (ஆண்கள்)

1. சி குலசிங்கம், டிறிபோர்க் கல்லூரி,
2. பா. கண்ணன், சோமாஸ்கந்தா கல்லூரி
3. இ. சிவநேசன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

கீழ்ப் பிரிவு (ஆண்கள்)

1. தி. மோகன், யூனியன் கல்லூரி
2. கு. ஸ்ரீகுமார், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
3. க தவராசா, கொக்குவில் இந்துக் கல்லூரி

மேற் பிரிவு (பெண்கள்)

1. சு வெண்ணிலா, யூனியன் கல்லூரி
2. சே ஹம்சாந்தினி, மகாஜனக் கல்லூரி
3. து. திருமறைச்செல்வி, மெதடிஸ்ற்

மத்திய பிரிவு (பெண்கள்)

1. சு. தாரகா, யூனியன் கல்லூரி
2. சி. விங்கேஸ்வரி, அருணோதயா கல்லூரி
3. யோ. மிதிலா, இந்து மகளிர் கல்லூரி

கீழ்ப்பிரிவு (பெண்கள்)

1. சு மேனகா. யூனியன்க ல்லூரி
2. ச ஸ்ரீ காந்தி, டிறிபோர்க் கல்லூரி
3. உ. ஒளவை, மகாஜனக் கல்லூரி

சமய அறிவுப் போட்டி பற்றிய முடிவுகளும், பேச்சு, திருமுறைப் போட்டி ஆகியவற்றில் இடம்பெற்றவர்கட்கு பரிசளிப்பு சம்பந்தமான விபரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழாப் போட்டிகள் அனைத்தையும் செவ்வனே நடாத்த, சகல உதவிகளையும் அளித்த அதிபர்கள், ஆசிரியர்கள், வட்டார அமைப்பாளர்கள், தட்டச்சாளர்கள், நடுநிலையாளர்கள் ஆகியோருக்கும் பங்கு பற்றிய சகல மாணவ மாணவிகட்கும் விழாக் குழுவின் சார்பில் எமது நன்றியையும் வாழ்த்துக்களையும் அறியத்தருகிறேன்.

அருணோதயக் கல்லூரி,
அளவெட்டி.
29-7-78

வி. சிவசுப்பிரமணியம்
அமைப்பாளர்,
நூற்றாண்டு விழாப் போட்டிக் குழு

வெளிவந்துவிட்டன!

சைவப்பெரியார்

சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A.

அவர்கள்

நாற்பது

பிறந்த தினத்தை முன்னிட்டு

அவர்கள் எழுதிய

சைவபோதம்

முதலாம் புத்தகம் 1-50

சைவபோதம்

இரண்டாம் புத்தகம் 1 50

விபரங்கட்கு: அதிபர், சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
450, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

சைவப் பெரியார் தினம்

சைவப் பெரியார் ஸ்ரீ மத் வெபாதசுந்தரம்பிள்ளை தினம் ஆடி மாதம் 24-ம் திகதி (9-8-78) புதன்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை மாநாட்டில், சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கொண்டாடப்படும்.

விரிவுரை

கோண்டாவில் மெதடிஸ்ற் சபை திருவாளர் கோவிலில், 1-8-78 செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணியளவில் குருபூசை என்று நீராவியடி பிரம்மஸ்ரீ சி.க. வை. நித்தியானந்தசர்மா அவர்களின் 'நடுத்தாட் கொண்டமை' விரிவுரை நடைபெறும்.

ஈட்டு வழக்கில் விற்பனவுக்கான அதிகாரம்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

வழ இல. ஈடு 3857

சதாசிவா வெபாதசுந்தரம் புலோலி தெற்கு, புலோலி. —வாதி

எதிராக

1. சண்முகநாதன்
2. பெண்சி த ஆல் 93தெவி புலோலி தெற்கு புலோலி — பிரதிவாதிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் நிர்ணயித்த நிர்வகிப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப் படியும் இதன் கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் 1978ம் ஆண்டு புரட்டாதி மாதம் 7ம் திகதி (7-9-78) வியாழக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் குறித்த ஆதனத்தில் எல்லாம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வரிக்கு ரூபா 8780ம் மேலும் ரூபா 3600ம் வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 15 வீத வட்டி வீதம் வழக்கு ஆணைத்த திகதியான 1977-ம் ஆண்டு மாசி மாதம் 14-ம் திகதியில் இருந்த நிர்வாகத் திகதியான 1977ம் ஆண்டு வைகாசி மாதம் 16ம் திகதியான வட்டியும் அதன்பின் நிர்வாகத்தானுக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியான வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 9 வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 200ம் இதில் முதலில் ரூபா 1000க்கு செலவு ரூபாய் 200ம் கட்டிவிட்டார்கள்.

ஆதன இடாப்பு

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோவிற் பற்று புலோலி தெற்கு வெள்ளிபாகு தேவன் குறிச்சியிலை "கொற்றியாவத்தை" இது பருத்தித்துறை டிஸ்திரிக் கோடு 2907/P ம் இலக்கப் பிரிவிடம் வழக்கு வைத்தித் தீர்வையும் அனுக்கப்பட்டதும் உரித்தா மேஸ்தரி வே. சிவராத்தினத்தால் 1948 ஆம் மாதம் 30ம் திகதி 887ம் இலக்கத்தில் விற்றாரிக்கப்பட்டது மான படத்தின்படி நில. குழி 12, 24/32 இதில் குறித்த படத்தில் 1ம் இலக்கத் துண்டுக்குரிய குழி 17, 30/32 இதில் மிழக்குப் புறமாக குழி 5, 4/32 இதுவும் குறித்த படத்தில் 2ம் இலக்கத் துண்டுக்கு குழி 12, 28/32 ஒன்றும் இருக்கிறபடி அதற்குக் குழி 17 30/32 எல்லை மிழக்கு: சேனதிராஜசேகரம் கைலைபெண் இலட்சுமிப்பிள்ளைக்குரிய ஆதனம்

வடக்கு:- வைரவன் வேலனுக்கும் பெண் வள்ளிக்குமுடைய ஆதனம், மேற்கு:- கப்பிரமணியம்/நாகையாவுக்குமுடைய ஆதனம், தெற்கு:- கிராமச் சங்க ரோட்டு. இவ்வெல்லைக் குட்பட்ட நிலம், பயிர்கள், கொட்டில், வடலிகள்.

கா. முத்துக்குமாரு ஐயர்
நீதிமன்ற ஆணையாளரும்
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்

நகுலேசுவரி ஆலயம்,
சந்திரவேல்.
பருத்தித்துறை. 142, 28-7

பண்டிதமணிக்குப் பெருவிழா

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சபையின் காரியதரிசி திரு. ஆ. பஞ்சாட்சரம் அவர்கள் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழ்நேசம் உலகு மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் இக் கட்டுரைத்தொகுதி பழைய மாணவர்கள், அன்பர்கள், அபிமானிகள் உட்படப் பொது மக்கள் சார்பில் பாராட்டுப் பெரு விழாவில் விசேடமான முறையில் வெளியிட்டு வைக்கப்படும் என்றும் அச்சமயம், இலங்கை இலுவப் பேராசிரியர்களின் வாழ்த்துக்கள், கட்டுரைகளை கொண்ட விசேடமலர் கலாநிதி பண்டிதமணி அவர்களின் எண்பதாவது நிறைவு தினத்தையொட்டி வெளியாகும் என்றும், விசேட இசை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன என்றும் தெரிவித்தனர்.

ஈட்டு வழக்கில் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

தங்கராசா தெற்கு, வேலுப்பிள்ளை கனகம்மை நாச்சிப்பிள்ளை —வழக்காளி

வழ. இல. ஈடு. 709 எதிராக

தங்கராசா தெற்கு, தம்பையா விநாயகமூர்த்தி —எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் நிர்ணயித்த நிர்வகிப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த விற்பனவுக்கான அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படுமாதனம் 1978 ம் ஆடி மீ 4ம திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் குறித்த காணியிடமாகவிருந்து எல்லாம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன இடாப்பு

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று துன்னாலை, சேகற்கொடி தெவடி குறிச்சியிலை "காட்டு வயல்" நெற் பர. 36. தெ "காட்டுவயல்" நெற் பர. 9. கூடிய நெற் பர. 45. இதில நாற்பத்தைட்டினைந்து பங்குக்கு ஆட்பெயடி நெற் பர. 6 ஐந்த பரப்பு. எல்லை கிழக்கு தொடுகைக்காரனுக்குரிய வாதனம். வடக்கு தம்பையா சிவசிரிங்கராசாவுக்குரிய ஆதனம். மேற்கு சந்தவனம் கைலைபெண் அழகரத்தினத்துக்குரிய வாதனம். தெற்கு தாமோதரம்பிள்ளை பெண் பரமேஸ்வரிக்குரிய வாதனம். இவ்வெல்லைக் காணிக்கூடாகப் போகும் ரோட்டு நிலம் பிறநீங்கலாக மிகுதியடங்கலும்.

தரைச்சித் தொகை 1292-00

ரூபா 1292-00க்கு 12-5-1976 தொடக்கம் 28-11-1977 வரை 10 வீத வட்டி	ரூபா	194-00
ரூபா 1485-00க்கு 29-11-1977 தொடக்கம் 21-9-1978 வரை 9 வீத வட்டி	ரூபா	112-00
வழக்குச் செலவு	ரூபா	125-00
	ரூபா	1723 00

நீதிமன்றத்தால் ஏற்கப்பட்ட விலை ரூபா 1500-00

"உமாபதி"
நெல்லண்டை ரோட்,
தும்பளை,
பருத்தித்துறை, 1-8-78

R. S. இராமநாதன் J. P.
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்,
விலைமதிப்பாளர், ஏலவிற்பனையாளர்.
143 | 28 8.78

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

மரணசாதன நிபாபாதிக்கம் இல: 430 T

காலஞ்சென்ற ஏரவெட்டி மேற்கு எண்ணுமிடத்தைச் சேர்ந்த கந்தையா ஆறுமுகம் பெண் தங்கரத்தினம் என்பவரின் ஒரு மித்த மரணசாதன விடயத்தில்

— மரணமெய்தியவர்

கந்தையா ஆறுமுகம், ஏரவெட்டி மேற்கு

எதிராக — மனுதாரர்

பராயமடையாதவர்கள்

1. ஆறுமுகம் வைரத்தினம்
2. ஆறுமுகம் மகள் நாகரத்தினம்
3. ஆறுமுகம் மகள் செல்வரத்தினம்
4. ஆறுமுகம் மகள் தவரத்தினம்
5. ஆறுமுகம் ஜெயரத்தினகுமார்
6. ஆறுமுகம் மகள் ஜெயலட்சுமி
7. ஆழ்வார் வீரகத்தி,

பாவரும் ஏரவெட்டி மத்தி, ஏரவெட்டி

— எதிர் மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறப்பிட்ட இறந்த போனவரின் மரணசாதனத்தை எனபிப்பதற்காக இந் நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதிவப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978 ம் ஆடி மீ 18-ஆம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதிவப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முறருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இதனால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1978 ம் ஆடி மீ 4-ம் திகதி
நீதிமன்றக் கட்டளைப்படி

வரைவு:
க. கு. பாலசுப்பிரமணியம்
மனுதாரின் சட்டத்தரணி.

ஒப்பம்: க. விசுவலிங்கம்
பதிவாளர்.
141 81, 28-7-78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THOUGHTS TO BE TREASURED

காயத்தேர் ஏறி மனப்பாகன் கைகூட்ட
மாயத்தேர் ஏறி மயங்கும் அவை, உணர்
சேயத்தேர் ஏறி சிவன் அருள் பெற்றுச்
சுயத்தேர் ஏறி அவன் இவன் ஆமே.

Embodied Souls misled by the mind get bewildered in the world of Maya. If they receive the Grace of the taintless Lord by the practice of loving devotion, they will attain the tranquil state of Divine communion and Adwaitha Bliss.

OUR NEW MANAGER

Mr. S. Sivagurunathan, M. A., Dip-in-Ed. Principal Emeritus of Chithambara College, V V T and Govt. Teachers' Training College and Writer of Text Books, Ministry of Education has been appointed Honorary Manager of the Hindu Organ and Saiva Prakasa Press.

Mr. Sivagurunathan is a son of the late Mr. ST. M. P. Sithambaranatha Chettiar, one time Honorary Manager of the Hindu Organ and Saiva Prakasa Press and Treasurer, Vice-President and Honorary Life Member of the Saiva Paripalana Sabhai.

Hindu Organ

Friday, July 28, 1978.

INDISCREET INDICATIONS

There is a rumour afloat that the price of rice will rise in the open market. It is enough indication to the indiscreet trader to raise the price of rice quite arbitarily.

The news that the price now being paid to the cultivator for paddy may be increased has given room for rumour-mongering.

It has been the practice of petty traders to increase prices of all commodities should by some exigency the cost of a particular article become exhanced. This pattern of commercial fraud must be stopped at all levels by administrative action. It is no wonder that the common man is groaning under the cruel impact of a soaring cost of living.

The concept of Dharma should be put into practice; it should not be allowed to remain merely as axioms in text books. The meanings of democracy, socialism, republicanism must necessarily agree on one aspect namely the welfare of the people. What does the country gain by calling itself the idealistic state if the common man continues to be left to himself buried in misery and misgivings?

The Government frequently announces that the criticism by the Press of the Administration is eagerly awaited, Here in our country the newspapers never fail to bring to the notice of the Government defects, lapses and irregularities in the administrative sections But we are not aware of sufficient reaction on the part of the Government by appropriate remedial measures.

To say that stocks of rice are in danger of becoming rotten and at the same time to indicate the need for raising the price of this commodity is both ludicrous and fallacious Why have not the Ministers concerned taken immediate steps to release these stocks to be distributed through the co-operative depots to the people at the normal rate.

The predominating feature of the preset situation is the availabity of articles but at prohibitive prices. During the previous administration non-availability and resulting high prices were the symptoms, What is the difference?

Saiva Periyar Centenary Reproduction

GLORIES OF SHAIVAISM

By S. Shivapadasundaram B. A.

(continued from last issue)

Next in order of time come the Devarams. These were the compositions of Appar, Sampandar and Sundarar and are more voluminous than Thiruvachakam. An anonymous sage has given the headings dealt with by the twenty-five pathigams, which form the Agasthiar Thevara Thiraddu. Whether other pathikams also speak of a particular philosophic topic we are not in a position to say. Even these surface meanings are of great value to us But infinitely more valuable than philosophic truths and surface truth is the Grace of God present in them. This is available to every devout singer whether literate or illiterate. It heals him Just as a patient who does not know the properties or even the names of the ingredients of a medicine is fully benefitted, so a singer who knows neither the philosophic nor the surface meaning of a hymn gets the benefit.

No Shaivite can justify his birth as a Shaivite if he has not studied at least ten pathikams of Thiruvachagam or Devaram; and a Shaivite can be proud of himself if he has studied the whole of Thiruvachakam or about fifty pathikams of Devaram. There are some other saints also, like Pattanathar and Thayumanavar whose hymns are held sacred.

After these come the Puranas which, however, are not authoritative. They have puranic garb and a poetic garb of which they must be divested before the truth in them can be discovered. The author of Kandapuranam says that men of Wisdom must seek and find out the truths contained in the Puranas, meaning thereby that tuuth is not always on the surface of Puranas. Sri la Sr. Arumuga Navalar says that none of the three weddings in the Kandapuranam ever happened and that they symbolise the manifestation of shakthi at the time of creation of the Universe and that anyone who interprets these portions literally would go to hell along with the bearer.

Puranic Stories which do not accord with Shastric truths must either be interpreted philosophically or be shelved.

If one wants to eat cocoanut, one must remove the husk and shell. No one regards the husk as the edible portion and bites it.

But, there are books misnamed Puranas which are full of filth and chaff and are disowned by us

Sacred Ashes

The highest, the simplest and the universal gift of Shaivaism to its followers is the Sacred Ashes, Thiru-Neeru. The Sanskrit name for this is Vibhooti, which means a priceless treasure and a superhuman power. It is the highest gift because it is the image of the Love of God, the Parasakti. It is simple because it is obtainable everywhere and for nothing. It is universal because everyone who claims to be a Shaivite is in possession of it. No one is a Shaivite who does not wear it.

Agastyar's Devara-tirattu (தேவாரத் திரட்டு) consists of twentifive pathikams and the significance of each of these is given in a poem composed by an anonymous sage. Sampandaher's Thiruneetupathikam is a description of Parasakti, the Grace of God, also called Umadevi. His very words are நீற்றுப்பதிகம் நிகழ்த்துங்கால் மாறறப் பரையின் வரவாருளும். But it does not require a sage to discover from the pathikam that Thiru-neeru is Parashakti.

Sambander gives in the pathikam as many as fifty-four characteristics of Thiru-neeru, a great many of which are well-known attributes of Shiva Shakti. He has identified Thiru-Neeru (மந்திரமாவது நீறு) with the matram which according to Siddhiar (1-58) is caused and influenced by Shiva Shakti (சத்தி தான்பிரேரித்தபின்தான் அதிட்டித்துக் கொண்டு). t is said to give liberation to the soul (முத்தி தருவது நீறு), which the Shiva Shakti does. It gives Gnanam (போதம் தருவது நீறு) which is given by Shiva Shakti.

When, therefore, we wear Thiru-Neeru, we wear Shiva Shakti, the love of God Our forehead and other parts of the body on which we wear Thiru-Neeru become the abode of Shiva-Shakti. When we wear it we generally repeat the great mantram "Shiva, Shiva". This mantram is the invocation for the presence of Shiva Shakti in the Thiru-Neeru, a presence such as that of ghee in curd. We wear it on the forehead, which is the seat of thoughts, and on the chest which is the seat of feelings. If worn in the right spirit, Thiru-Neeru induces right thoughts and right feelings.

The orthodex method of wearing Sacred Ashes endows it with the presence of Shiva Shakti and practically identifies it with the Shakti. This method consists of four processes:

(1) The eleven great mantrams are infused into it by repeating them over it so that the Shiva Shakti present in the mantrams may be specially present in the Sacred Ashes.

(2) Consecrated water is poured on it with the utterance of a mantram and is mixed with the utterance of another in the Sacred Ashes.

(3) It is worn on the crown of the head, on the forehead, on the chest, on the navel and several other parts of the body with the mantrams in which Shiva Shakti is present respectively as the giver of Divine Bliss (Shivanandam, of the suppression of Malam, of rest after the chain of births, of protection and of creation.)

(4) The remaining Sacred Ashes is mixed with additional water and the five great mantrams are impressed on it; it is then sprinkled on the head. In this method, the Sacred Ashes is worn on three lines which are respectively Kriya Shakti, Icheha Shakti and Gnana Shakti. These Saktis are forms of Parashakti Kalagnirudra Upanishad 7-9).

(To be continued)

Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450 K. K. S. Road, Vannarponnai, Jaffna on Friday, July 28, 1978.

Editor-in-Chief: R. N. Sivapiranabam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org